**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 622/2019 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : LW7 /PW- 5 | Village: |
| Name | : சித்ரா, மருத்துவர் | Age : |
| Father's/Husband's Name | : | Taluk : |
| Nationality | : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 10/10/2022**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமை காவலர் திருமதி டென்னிசா மேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 08/09/2016 ம் தேதி கும்பகோணம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது, அன்றையதினம் இரவு 08.00 மணிக்கு திருப்பனந்தாள் கிராமத்தை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி மகன் பிரபாகரன் என்பவரை அவரது சகோதரர் வாஞ்சிநாதன் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்தார். நான் அவரை விசாரித்தபோது, அன்றையதினம் அடையாளம் தெரிந்த ஒரு நபர் திருப்பனந்தாள் சன்னதி தெருவில் வைத்து கத்தியால் குத்தியதாக கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது, அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1. அவரது வயிற்று பகுதியில் 3X2 X2 செ.மீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது .2. இடது பக்க பின்புற தோள்பட்டையில் 4X2 X2 செ.மீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது. 3. அவரது இடது

கையில் 3X1 X1 செ.மீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது. 4. அவரது வலது புற பின்தோள்பட்டையில் 2X2 X2 செ.மீ அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சை அளித்து அவரது அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என சான்று வழங்கினேன். (**மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி காயங்கள் மேற்சொன்ன நேரத்தில் மேற்சொன்ன விதத்தில் தாக்கியிருந்தால் மேற்சொன்னவாறு உள்காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

மேற்படி காயம்பட்ட நபர் திருப்பனந்தாள் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று தான் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை க்கு வந்தார் என்றால் அவ்வாறான குறிப்புகள் எதுவும் விபத்து பதிவேட்டில் இல்லை. விபத்து பதிவேடு பதிவு செய்வதற்கு யார் விபரம் கூறினார்கள் என்றால் காயம்பட்ட நபரின் அண்ணன் வாஞ்சிநாதன் விபரம் கூறினார். இரு சக்கர வாகனத்தில் சென்று கரடு முரடான சாலையில் கீழே விழுந்தால் ஏற்படி வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பு இல்லை. காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயங்கள் வெட்டுக்காயங்கள் தான் இருந்தது என்றாலும், குத்துக்காயம் ஏதும் இல்லை என்றாலும் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**